REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 14உ திங்கள் (29—7—57) ★ ★ வெளியீடு: ஆடி 15உ செவ்வாய் (30—7—57) [இதழ் 37

மாணவர் மீது தடியடிப் பிரயோகம்

ஜெய்ப்பூர், ஜூலை 27—

மாநில சர்க்கார், பள்ளிக்கூட சம்பளத்தை அதிகரித்ததை எதிர்த்து, இராஜஸ்தான் சர்க்கார் தலைமை அலுவலகத்தின்முன் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களைப் போலீசார் தடிகொண்டு தாக்கிப் படுகாயப்படுத்தினர் என்று தெரியவருகிறது.

50 மாணவர்களுக்கு மேல் காயம்பட்டனர் என்றும், 12 பேர் படுகாயப்பட்டனர் என்றும் தெரியவருகிறது. காயம்பட்டவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப் பட்டனராம்.

அசாம் உரிமைப் போராட்டத்தில் புதிய கட்டம்

'நேரு அறிவிப்பை நம்புவதற்கில்லை'

'எங்களை ஏமாற்றவே இதுவும் ஒரு சதி என அஞ்சுகிறோம்'

'எண்ணெய் தொழிற்சாலையைப் பெறும் வரையில் போராட்ட இயக்கம் நிறுத்தப்படமாட்டாது'

கௌஹாதி, ஜூலை 29—

அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவப்படும் என்ற தெளிவான அறிவிப்பு, டெல்லி சர்க்கார் சார்பில் பண்டிதர் விடுத்திருக்கும் அறிக்கையில் காணப்படாததால், இன்று (ஆக. 29) நடத்தத் திட்டமிட்டிருக்கும் பொதுவே வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறுவதற்கு இல்லை என்று, அசாம் எண்ணெய்த் தொழிற்சாலை செயற்குழு, கௌஹாதியிலிருந்து அறிவித்திருக்கிறது

செயற்குழுவின் தலைவரான ஹரேஷ்வர் கோஸ்வாமிதான், மாநில சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவரும் ஆவார். அவர் இந்த முடிவை பத்திரிகையாளரிடம் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:—

"அசாமைப் பொறுத்து டெல்லியின் கடந்த காலப் போக்கைக் கவனித்தால், அசாம் மக்கள், டெல்லியின் இப்போதைய அறிவிப்பின் நோக்கத்தைச் சந்தேகிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்; டெல்லி சர்க்காரின் அறிக்கை தெளிவில்லாமல் இருக்கும் காரணத்தால், இந்தச் சந்தேகம் கொள்ளாமலிருப்பதற்கில்லை; இந்தச் சந்தேகத்தைப் போக்குவதற்கு, டெல்லியின் அறிக்கை உதவவில்லை!

"தொழிற்சாலை நிறுவுவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பது, மக்களை ஏமாற்றக் கையாளப்படும் மற்றொரு தந்திரம் என்றே நாங்கள் அஞ்சுவதில் நியாயம் இருக்கிறது.

"மேலும் அந்த அறிவிப்பு, இப்போது மக்களிடை தோன்றியுள்ள எழுச்சியைப் பலவீனப்படுத்தி, நெருக்கடியான கட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளவும் மேற்கொள்ளப்படும் முயற்சி என்றும் அஞ்சுகிறோம். ஆனால், அசாம் மக்கள், 'அசாமில் தொழிற்சாலை வேண்டும்' என்ற தங்கள் கோரிக்கை ஈடேறும் வரையில், இந்த போராட்ட இயக்கத்தை நிறுத்துவதாக இல்லை."

★

பண்டித நேருவின்

'இரண்டுங்கெட்டான்' அறிக்கை

அசாம் தூதுக் குழுவைச் சந்தித்த பின் நேரு பண்டிதர் டெல்லி சர்க்கார் சார்பில் விடுத்துள்ள அறிக்கை, 'இரண்டுங்கெட்டான்' நிலையில் இருக்கிறது.

"அசாமில் எண்ணெய்த் தொழிற்சாலை நிறுவுவது என்ற கோரிக்கையை அடியோடு தள்ளிவிடுவது என்ற பிரச்சினையே இல்லை; மாநிலத்தின் கோரிக்கை இந்த விஷயத்தில் மட்டுமின்றி வேறு விஷயங்களிலும் மிகுந்த அனுதாபத்துடன் கவனிப்படும் என்று அசாம் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறோம்"

என்று பண்டிதரின் அறிக்கை கூறுகின்றது.

"பிரச்சினையின் எல்லா அம்சங்களையும் விரிவாக ஆராயும் நோக்கத்துடன், பீகாரில்—பிரௌனியில் தொழிற்சாலை நிறுவுவது பற்றி ஒரு திட்ட அறிக்கை கேட்டிருக்கிறோம்; அதேபோல, அசாமில்—கௌஹாத்தியில் நிறுவுவது பற்றியும் திட்ட அறிக்கை கேட்டிருக்கிறோம்"

என்றும் பண்டிதரின் அறிக்கை கூறுகிறது.

மேலும் அவர் அந்த அறிக்கையில், தொழில்நுட்ப அம்சங்கள், மற்றும் சிக்கல்கள்கொண்ட ஒரு பிரச்சினையை, அமைதியான சூழ்நிலையில் விவாதிப்பது, ஆலோசிப்பதின் மூலம்தான் தீர்க்கமுடியும் என்றும், எனவே, கிளர்ச்சி அறிவிப்புக்ள் கண்டு வருந்துவதாகவும், அசாம் மக்களின் விருப்பத்தை தான் பூரணமாக அறிந்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

சுதந்திரத்திற்கு முன் அசாம் மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தான் உணர்ந்து, அதனுல் எல்லாவகையான உதவியும் ஊக்கமும் தர எண்ணிவந்திருப்பதாயும், பல பிரச்சினைகளையும் சமாளிக்க வேண்டியுள்ள அசாம் பற்றி பிரத்தியேகக் கவனம் செலுத்தப்படும் என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்.

★

திருப்திதானும் - நம்புகிறாராம்!

டெல்லியிலிருந்து திரும்பியுள்ள அசாம் முதல்வர், டெல்லியின் அறிவிப்பு தனக்குத் திருப்தி என்றும், பிரச்சினைக்கு ஒரு சுமூகமான முடிவு கிடைக்குமெனத் தான் நம்புவதாகவும் கூறியிருக்கிறாராம்!

பிரௌனியைப் போலவே கௌஹாத்தியில் தொழிற்சாலை நிறுவுவது பற்றியும் ஒரு திட்ட அறிக்கை தயாரிக்குமாறு டெல்லி சர்க்காரை வற்புறுத்தியதில் தூதுக்குழு வெற்றிபெற்றிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறாராம்!

இரண்டு திட்ட அறிக்கைகளுக்கும் பிறகுதான் இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'ஹங்கேரியில் மீண்டும் புரட்சி'

பல்லாயிரம் பேர் கைதானதாகத் தகவல்

புதாபெஸ்ட் ஜூலை 27—

"பல ஆயிரம் ஹங்கேரியர்கள் கடந்த பத்து நாட்களில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; இப்படிக் கூட்டம் கூட்டமாகக் கைது செய்வதற்குக் காரணம், இவர்கள் மீண்டும் ஓர் 'புரட்சி'க்கு தயார் செய்து கொண்டிருந்தனர் என்பதுதான்"

என்று ஒரு கம்யூனிஸ்டு மந்திரி கூறியிருக்கிறார் என நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்தி தரப்படுகிறது.

10 நாட்களுக்குமுன் துவங்கிய இந்த சிறை பிடிக்கும் வேலை முடிந்துவிட்டதா, அல்லது நீடிக்கிறதா என்பது தெரியவில்லை என்றும், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,500 முதல் 5,000 வரை இருக்கலாம் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றனவாம். ஆனால் புதாபெஸ்டில் உலவும் வதந்திகளின்படி, இந்தத் தொகை மேலும் அதிகமாக இருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. இதில் எந்த எண்ணிக்கையும் உறுதி செய்யப்படவில்லை.

போலீசார் வீடுகளுக்குச் சென்று கூட்டம் கூட்டமாக மக்களைக் கைது செய்து, காவல் முகாம்களுக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என்றும், இவர்கள் உடனடியாக விசாரணை செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பல வயதினரும், பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் அடங்கியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

சென்ற ஆண்டு அக்டோபரில் நடத்தியதைப்போலவே இந்த ஆண்டும் அக்டோபர் திங்களில் ஒரு 'கலகத்'தை நடத்துவதற்குக் கைது செய்யப்பட்டு வருகின்றவர்கள் சதித் திட்டம் தீட்டியதாகவும், அதனை முறியடிக்கவே, இந்த நடவடிக்கை என்றும், ஹங்கேரி மந்திரி ஜி. மரோசான் என்பார் கூறியிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

ஊழல்கள் - ஒழுங்கீனங்கள்

ஐந்து உயர்தர அதிகாரிகள் மீது நடவடிக்கை

புதுடில்லி, ஜூலை 26—

மத்திய பொது மராமத்து இலாகாவைச் சேர்ந்த 5 உயர்தர அதிகாரிகளும், மூன்று கெஜட் பதிவில்லாத அதிகாரிகளும் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பதுடன், அவர்கள்மீது இலாகாபூர்வமான நடவடிக்கையும் எடுக்க ஏற்பாடாகியிருக்கிறது.

இவர்கள் மேற்கொண்ட சில கட்டிட வேலைகள் திருப்திகரமாகயில்லை என்றும், இவற்றில் ஊழல்கள்—ஒழுங்கீனங்கள் மலிந்துகிடக்கின்றன என்றும் சர்க்காரால் காணப்பட்டதின் விளைவாகவே இந்த நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது.

சட்டத்தை நீடிப்பதால் மட்டும் பாதுகாப்பு கிடைத்துவிடுமா?

சட்டசபையில் எஸ். எம். அண்ணுமலை தெளிவுரை

சென்னை, ஜூலை 27—

ரயத்துகள், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தை 1957-ம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள்வரை நீடிப்பதற்கான மசோதாவை இன்று சென்னை சட்டசபையில் ரெவினியூ அமைச்சர் மாணிக்கவேலர் கொண்டுவந்தார்.

விவாதத்திற்குப் பிறகு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இத்துடன் சென்னை சட்டசபை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

விவாதத்தில் கலந்துகொண்டு தோழர் எஸ். எம். அண்ணுமலை அவர்கள் பேசுகையில், 'இந்தச் சட்டம் மிராசுதாரர்களுக்குப் பாதுகாப்பளிப்பதாக இருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

சாதாரண ஏழை சாகுபடியாளர்கள், 477-வது சட்டப்படி தானுக வரம்புகடந்து ஆக்கிரமித்துக் கொண்டதாக (டிரெஸ்பாஸ்) பல இடங்களில் வெளியேற்றப்படும் கொடுமையை சுட்டிக்காட்டினர்.

இந்த அவல நிலையைப் போக்க நிலங்களில் உழுபவர்களின் கணக்கைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

இதன் மூலம் நீதிமன்றத்திற்கு செல்லாமலே சாகுபடியாளருக்கு நீதிகிடைக்கும் என்பதையும் சுட்டிக்காட்டினர்

'சில இடங்களில், 'சொந்தமாகவே பயிர் செய்யப் போகிறேன்' என்றுகூறி குடியானவர்களை வெளியேற்றி விடுகின்றனர்; எனவே, இந்தச் சட்டத்தை நீடிப்பதால் எதிர்பார்க்கப்படும் பாதுகாப்பு குடியானவர்களுக்கு ஏற்பட்டுவிடாது என்றும் விளக்கினர்.

பெண்ணுடகத்தில் சர்க்கரை ஆலை

எம். செல்வராஜ் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, ஜூலை 27—

சட்டசபையில், கழக உறுப்பினர் தோழர் எம். செல்வராஜ் அவர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், தொழில் அமைச்சர் வெங்கட்ராமன், தென்னுற்காடு மாவட்டத்தில் உள்ள பெண்ணுடகம் என்ற இடத்தில் சர்க்கரை ஆலை ஒன்று ஏற்படுத்தி, கூட்டுறவு முறையில் அதனை நடத்துவதற்காக மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது என்றும், இந்தத் திட்டத்திற்கு ரூ. 40 இலட்சம் செலவிடப்படும் என்றும், நாள் ஒன்றுக்கு 200 டன் சர்க்கரை தயாரிக்கப்படும் என்றும், மாநில அரசாங்கம் இதற்காக ரூ. 15 இலட்சம் செலவிடுவதற்கு முடிவு செய்திருக்கிறது என்றும் கூறினர்.

வெள்ளக் கொடுமை

4,000 பேர் பலியாயினர்

டோக்கியோ, ஜூலை 28—

ஜப்பானில் ஏற்பட்ட வெள்ளத்தில் 4,000 பேர் கொல்லப்பட்டனர் என்றும் பாதிக்கப்பட்ட இடங்களைமுதலமைச்சர் பார்வையிட்டார் என்றும் தெரிய வருகிறது.

மெக்சிகோவில் நில நடுக்கம்!

நியூயார்க், ஜூலை 28—

மெக்சிகோ நகரத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் காரணமாக 14 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 172 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் இவ்வளவு கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டதில்லையாம்.

விதித்த வரியால் ரூ. 44 இலட்சம் வசூலாயிற்ரும்!

சென்னை, ஜூலை 27—

1956—57-ம் ஆண்டில் உணவுத் தானியங்கள் மீது விதிக்கப்பட்ட விற்பனை வரியின் மூலம் சென்னை அரசாங்கத்திற்கு மொத்தம் ரூ. 44 இலட்சம் கிடைத்துள்ளது என்று சட்டசபையில் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—7—57 திங்கள்

அமைச்சர் அறிய வேண்டும்!

மத்திய அரசாங்க உத்தியோகங்களைப் பெற வேண்டுமானால் இந்தி மொழியைத் தமிழ் மக்கள் கண்டிப்பாகப் படித்தாக வேண்டும் என்று நிதி அமைச்சர் வற்புறுத்தியுள்ளார். இவ்வாறு நிதி அமைச்சர் கூறியுள்ளதைக்கொண்டு, இந்தி மொழியைக் கற்றுக்கொள்ளும் அனைவருக்கும் எதிர்காலத்தில் மத்திய அரசாங்க உத்தியோகங்கள் கிடைப்பது நிச்சயமாகும் எனத் தமிழ் மக்கள் எண்ணுவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

இது, வெறும் மனமயக்கம். மிகமிகத் தவறான எண்ணமுமாகும்.

மத்திய அரசாங்க உத்தியோகம் என்பது விரிந்துகொண்டே போகக்கூடிய தொழில் ஏற்பாடல்ல. குறிப்பிட்ட எண்ணிக்கை அளவுடன் முற்றுப் பெறக் கூடியதாகும்.

இப்பொழுது மத்திய அரசாங்க உத்தியோகங்களில், ஏறத்தாழ பதினேழு லட்சம் நபர்கள்தான் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கப் புள்ளி விவரம் கூறுகிறது. இன்று தனியார் துறைக்கு என ஒதுக்கப்பட்டுள்ள சிறிய பெரிய தொழில்களில் பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ தேசிய மயமாக்கி, அவை அனைத்திலும் இந்தி கற்றுக் கொள்ளும் வயது வந்தத் தமிழ் மக்களை மட்டுமே நியமிப்பது என மத்திய அரசாங்கம் முடிவு கட்டிக்கொண்டாலும், அப்பொழுதும் பல இலட்சக்கணக்கான இந்தி கற்ற தமிழ் மக்கள், மத்திய அரசாங்க உத்தியோகத்தைப் பெற முடியாது தெருவில் நின்று தவிக்க வேண்டியவர்களாகத்தான் இருப்பர்.

மத்திய அரசாங்க உத்தியோகம் என்பது இந்தி மொழியைப் பயின்று கொள்ளும் தமிழ் மக்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள தனித்துறை அல்ல. தமிழகத்தைப் போன்றே, மற்ற மாநிலங்களுக்கும் அத்துறை பொதுவானதாகும். அப்பொதுத் துறையில் இடம் பெறுவதில், நிதி அமைச்சர் கருத்துப்படி, இந்தி பயின்ற தமிழ் மக்களுக்கு உரிமை இருப்பது போலவே, மற்ற மாநிலங்களில் இந்தி பயின்றுள்ள மக்களுக்கும் அதே அளவு உரிமை உண்டு.

இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அம்மொழியில் தேர்ச்சி பெற்று திறமைசாலிகளாக இருப்பதும், அதைத் தாய் மொழியாகக் கொள்ளாத தமிழ்மக்கள் உள்ளிட்ட ஏனைய திராவிட மொழி மக்கள் அம்மொழியில் பட்டம் பெற்றும் திறமை குறைந்தவர்களாக இருப்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும். இதன் விளைவாக, நிர்வாகத் திறமை கருதி, தமிழ் மக்களையும் ஏனைய திராவிட மொழி மக்களையும் தனது உத்தியோகங்களில் அமர்த்திக் கொள்ளுவதற்குப் பதிலாக, இந்திமொழி வழிவந்த இந்தி கற்றவர்களையே தனது உத்தியோகங்களில் அமர்த்திக் கொள்வதே முறையாகும் என மத்திய அரசாங்கம் தீர்மானிக்கவும் கூடும். ஒருவர் பெற்றுள்ள கல்வி தகுதிகள் எல்லாம் ஒதுக்கித் தள்ளப்பட்டு, நிதி அமைச்சர் நம்பிக்கைப்படி இந்திமொழி கற்றிருப்பவர்களுக்கு மட்டுந்தான் மத்திய அரசாங்க உத்தியோகங்கள் என்ற புது விதி நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமானால், இந்தி மொழியில் மிகமிகத் திறம்பட செயலாற்றுகின்றவர்களுக்கு மட்டுந்தான் முதற் சலுகை அளிக்க மத்திய அரசாங்கம் முனையவுங்கூடும்.

அத்தகு சூழ்நிலையில், மத்திய அரசாங்க உத்தியோகங்களை இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுடன் போட்டியிட்டு இந்தி கற்றுள்ள தமிழ் மக்களால் பெறவே முடியாது. அதன் பலனாக, நிதி அமைச்சர் சொல்லை நம்பி, மத்திய அரசாங்க உத்தியோகங்களைப் பெற வேண்டும் என்ற ஆசையில், இந்தி மொழியை அரும்பாடு பட்டுக் கற்றுக் கொண்ட தமிழ் மக்கள், ஆசை நிறைவு பெறாது தமிழ்நாட்டுத் தெருக்களில் வேலை தேடித் தவிக்க நேரிடும்.

அப்பொழுது, அவ்வாறு வேலை தேடி வாடிக்கிடக்கும் இந்தி கற்றுள்ள தமிழ் மக்களுக்கு, தாயகத்திலேயே வேலை தேடித் தருவதற்கு இல்லையானாலும், ஆறுதல் கூறுவதற்காவது இந்த நிதி அமைச்சர் கிடைப்பாரா என்றால், நிச்சயமாகக் கிடைக்கமாட்டார். ஒருவேளை இந்த நிதி அமைச்சர் கிடைப்பதானாலும், இப்பொழுது கனமாக உள்ள சுப்பிரமணியம் அப்பொழுது நிச்சயமாகக் கனமாக இருக்கமாட்டார்!

மத்திய அரசாங்க உத்தியோகங்களிலும் பிறமாநில அரசாங்க உத்தியோகங்களிலும் இன்று தமிழக மக்கள் குறிப்பிடத்தகுந்த அளவில் இடம் பெற்றிருப்பது நிரந்தரமானதல்ல. இந்நிலை அன்னிய ஏகாதிபத்திய நடைமுறையின் மிச்சம் சொச்சம் — விட்ட குறை தொட்டகுறை. இது நீடிக்காது—இனி நீடிக்கவும் முடியாது.

ஆங்கில ஏகாதிபத்திய காலத்தில் ஆங்கிலம் பயின்றவர்கள் வடநாட்டில் அருபொருளாகக் கிடைத்து வந்தனர். அப்படி அருபொருளாகக் கிடைத்து வந்த ஆங்கிலம் கற்றவர்களிலும் அரசாங்க ஊழியத்தை ஒப்புக் கொள்ள முன்வந்தவர்கள் எண்ணிக்கை அத்திப் பூத்ததுபோல் இருந்தது. எனவே, 'மன்னர்பிரான் அரசாங்கத்தை ஒழுங்காகவும் திறமையாகவும் நடத்திச் செல்வதற்காக' என்று, ஆங்கிலம் கற்ற தமிழ் மக்களையும் ஏனைய திராவிட மொழி மக்களையும், இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெற்றுவந்த ஆங்கில ஆட்சிக்கு அன்று பொறுப்பாக இருந்தவர்கள், மத்திய—மாநில அரசாங்க உத்தியோகங்களில் இடமளித்தனர். இனி இதற்கு இடமில்லை. ஆங்கில ஆட்சியின் வெளியேற்றத்துடன், அது கையாண்ட முறைக்கும் முடிவுகட்டப்பட்டு விட்டது.

எனவே, மத்திய அரசாங்க உத்தியோகங்களைப் பெறுவதற்காக தமிழர்கள் இந்தி கற்றுக் கொள்ளவேண்டும் எனக் கூறியுள்ள நிதியமைச்சர், இந்தி கற்றுக்கொண்டாலும் மத்திய அரசாங்க உத்தியோகங்கள் இந்தி கற்றுக் கொண்ட தமிழ் மக்கள் அனைவருக்கும் கிடைக்காது என்ற உண்மையையும் அறிய வேண்டுகின்றோம்.

'சோஷலிச பாணி' சமுதாயத்தை அமைக்க விரும்புவோர் பாரபட்சம்?

பஸ் மார்க்கங்களுக்கு அனுமதி வழங்கும் இலட்சணம்!

போக்குவரத்துத் துறையில் இலாபம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன?

சட்டசபையில் எம். செல்வராஜ் விளக்கம்

சென்னை சட்டசபையில், பாதைப் போக்குவரத்துத் திட்ட செலவினங்கள் மானியத்தின் மீது கொண்டு வரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, கழக உறுப்பினர் எம். செல்வராஜ் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''அரசாங்கம், சென்னை நகரத்தைத் தவிர இதர எல்லாப் பகுதிகளிலும் உள்ள பஸ் போக்குவரத்தைத் தேசிய உடைமையாக்குவதில் தாமதம் காட்டுகிறது; இதனுடைய காரணம் எனக்கு விளங்கவில்லை.

''ஆளும் கட்சியில் பஸ் முதலாளிகளும், மிராசுதார்களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், பஸ் போக்குவரத்தைத் தேசிய உடைமையாக்குவதில் அரசாங்கம் கொஞ்சம் பின்னோக்கம் கொண்டதாக இருக்கிறது என்று நான் கூறவிரும்புகிறேன். குறிப்பாக, இந்தக் காரணங்களினால்தான் தேசிய உடைமை ஆக்குவதிலே அரசாங்கம் தாமதிக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

''தேசிய உடைமை ஆக்குவதில் சில கஷ்டங்களையும், நிர்வாகத்தில் சில குறைகளையும் நாம் பார்க்கிறோம். ஆனால், அந்தக் குறைகளை எந்த முறையில் களைய வேண்டும் என்பதில் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறிப்பாக நமக்குக் கொடுத்திருக்கும் 'பட்ஜெட்' விவரத்தின்படி, 1955—56-ம் ஆண்டில் 401 பஸ்களை ஓட்டியதில் ரூ. 38 இலட்சம் இலாபம் கிடைத்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதே பஸ்கள் சொந்த முதலாளிகளின் கையில் இருக்குமானால் அதிகப்படியாக ரூ. 15 முதல் ரூ. 20 இலட்சம் வரையில் இலாபம் காட்டியிருக்கமுடியும். இந்தக் குறைவுக்குக் காரணம், திறமைக் கோளாறுதான்!

''இம்மாதிரியான நிர்வாகங்களை அரசாங்கம் ஏற்று நடத்தும் போது, அந்தத் துறையில் அனுபவம் பெற்றவர்களை 'கௌரவ டைரக்டர்'களாக நியமிக்க வேண்டும்.

''தென் பகுதியில் டி. வி. எஸ்., ஜி. டி. நாயுடு போன்றவர் இந்தத் துறையில் மிக்க ஆர்வம் செலுத்தி, அதிலுள்ள சிக்கல்களைப் போக்கி நல்ல முறையில் பஸ் போக்குவரத்தை நடத்தி வருகிறார்கள். இவர்களைப் போன்றவர்களைக் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கச் செய்து அவர்கள் கூறுகிற யோசனைப்படி பஸ் போக்குவரத்தை அரசாங்கம் நடத்தியிருக்குமானால், இப்பொழுது கிடைத்திருக்கக்கூடிய இலாபத்தைவிட அதிகம் கிடைத்திருக்க முடியும். அப்படிச் செய்தால்தான் பஸ் போக்குவரத்தில் உள்ள குறைகளைத் தீர்க்க முடியும்.

''சென்னை நகரில் ஓடக்கூடிய பஸ்களில் 1942-வது 1944-வது 'மாடல்' பஸ்களும் ஓடிக்கொண்டிருக்கின்றன; ஆனால், இவற்றையே சொந்த முதலாளிகள் ஓட்டியிருப்பார்களானால் சட்டம் ஒன்று கொண்டுவந்து, அவைகள் மேலும் ஓடாதவாறு தடைவிதித்திருப்பார்கள். 'தனக்கு ஒரு சட்டம்—பிறருக்கு ஒரு சட்டம்' என்ற முறையில் இந்த நிலைமை மேலும் நீடிக்கக்கூடாது.

''அரசாங்கம் வாங்கும் பஸ்கள் எல்லாம் ஒரேவிதமான 'மாடல்'களாக இருந்தால் நல்லது; இப்பொழுது 'லேலண்டு' பஸ்கள் வாங்கப்படுகிறது; அந்த 'மாடல்' பஸ்களுக்கு வேண்டிய 'மெக்கானிக்'குகளும், உபகரணங்களும் நமது மாகாணத்தில் இல்லை. இதற்காக நாம் வெளிநாட்டை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பஸ்களை 'ரிப்பேர்' செய்ய வேண்டுமானால், இங்கிருந்து ஆட்களை வெளிநாட்டுக்கு அனுப்பி, அவர்கள் அங்கு பயிற்சி பெற்று, வேலையைக் கற்றுக்கொண்டு இங்கு வந்த பிறகு, அவர்களைக் கொண்டு இந்தப் பஸ்களை 'ரிப்பேர்' செய்ய வேண்டுமென்று சொன்னால், அதனால் அதிகமான செலவுகளும், கால தாமதமும் ஏற்படுகிறது. ஆகவே, ஒரே மாதிரியான 'மாடல்' பஸ்களை வாங்க வேண்டும். அப்படி ஒரே மாதிரியான பஸ்களை வாங்குவதோடுகூட, இந்தியாவிலேயே அதனுடைய தனி உறுப்புகள் சுலபமாகக் கிடைக்கக்கூடியதாகவும் இங்குள்ள 'மெக்கானிக்'குகள் அவைகளைப் பழுதுபார்க்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்; இதனால், இந்தியாவிலேயே மிகத் திறமையான இலாகாவை நிர்வகிப்பதில் நாம் சிக்கனத்தைக் கையாள முடியும்.

''மேலும், சென்னை நகரில் ஓடும் பஸ்கள் அனேக சமயங்களில் சுத்தமாக இல்லை. மழைக்காலங்களில், உட்காரும் இடங்களில் மழைத் தண்ணீராக இருக்கிறது. இந்தக் குறைகளை பிரயாணிகள் எடுத்துச் சொன்னால், பஸ் 'கண்டக்டர்'களுக்கும் பிரயாணிகளுக்குமிடையே சச்சரவு ஏற்படுகிறது. எனவே பஸ்கள் சுத்தமாக இருக்குமாறும், மழைக்காலங்களில் அவற்றில் தண்ணீர் ஒழுகாதபடியும் கவனிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

''பஸ் இலாகாவில் ஆண்டிற்கு ஒருமுறை 'மரியாதை வாரம்' கொண்டாடப்படுகிறது; ஆனால், 'மரியாதை வாரம்' பேச்சளவில் தான் இருக்கிறது என்று வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

''பஸ் மார்க்கங்களுக்கு அனுமதி கொடுப்பதைப் பொறுத்த வரையில், ஏற்கனவே அனுமதி கொடுக்கப்பட்டவர்களுக்குத் தான் மேலும் அனுமதி கொடுக்கப்படுகின்றன; இதன் காரணமாக, சில பஸ் முதலாளிகள் 20-30 மார்க்கங்களில் பஸ் விடுவதற்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள். நாம், 'சோஷலிசபாணி' சமுதாயத்தை அமைக்க விரும்பும் போது, இப்படிச் செய்வது கூடாது. எனவே, ஒவ்வொரு முதலாளிக்கும் இரண்டு அல்லது மூன்று மார்க்கங்களுக்குமேல் அனுமதி இல்லாதவாறு 'பர்மிட்'களைப் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

''மேலும், பஸ்களை தேசிய உடைமையாக்குவதில் தாமதம் ஏற்பட்டாலும், சில மாவட்டக் கழகங்களுக்கும், முனிசிபாலிடிகளுக்கும் பஸ்களை ஓட்டுவதற்கு மார்க்கங்கள் அனுமதிக்கப்படுமானால், அதனால் அவைகளுக்கு இலாபம் கிடைப்பதன் மூலம் மக்களுக்கு நன்மை செய்யமுடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

''லாரிகளைப் பொறுத்தவரையில் சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. 'லாரி'களுக்கு 'அன்லோட்—வெயிட்' அனுமதிப்பதில் சென்னை நகரத்திற்கும் மற்ற மாவட்டங்களுக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது. சில குறிப்பிட்ட 'லாரி'களுக்கு மற்ற மாவட்டங்களில் 18,000 பவுண்டுகள் அனுமதிக்கப்பட்டால், அதே 'லாரி'களுக்கு சென்னையில் 19,800 பவுண்டுகள் அனுமதிக்கப்படுகிறது; ஏறக்குறைய 2,000 பவுண்டுகள் வித்தியாசமாக இருக்கிறது. இதன் காரணமாக, லாரிக்காரர்கள் சென்னையிலிருந்து மற்ற இடங்களுக்குச் சென்றால், அங்கே 2,000 பவுண்டுகள் குறைவாக சுமையை ஏற்றிக் கொள்ளவேண்டியிருக்கிறது. இதனால், லாரி சொந்தக்காரர்களுக்கு பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இந்த அசௌகரியத்தை நீக்குவதற்கு ஏற்ற வகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

''மேலும், லாரிகள் சென்னையிலிருந்து ஆந்திரத்திற்கும் மைசூருக்கும் செல்லும்போது, ஆந்திராவில் 1/6 பங்கு அதிகமாக வரி கட்டினால் 'பெர்மிட்' வழங்கிவிடுகிறார்கள்; ஆனால் மைசூரில் இரண்டு பங்கு வரி வாங்குகிறார்கள். ஆந்திர மாநிலத்தில் பின்பற்றும் முறையையே மைசூரிலும் பின்பற்றச் செய்வதற்கு இம்மாநில சர்க்கார் மைசூர் அரசாங்கத்தாருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டும்.

''அடுத்தபடியாக வட்டார போக்குவரத்து அதிகாரங்கள் மாவட்ட வாரியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதில் மாவட்டக் கழக உறுப்பினர்கள், மாவட்ட போலீஸ் அதிகாரி, மாவட்ட கலெக்டர் முதலியவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இப்போது அதில் மாவட்ட கலெக்டரையும், வட்டார போக்குவரத்து அதிகாரியையும் மட்டும் வைத்துக்கொண்டு மற்றவர்களை நீக்கிவிட்டார்கள். இந்த முறையை மாற்றவேண்டும். அவர்கள் மட்டுமே இருப்பதால், இப்போது அவர்கள் எதேச்சாதிகாரிகளாக இருக்கிறார்கள். அதில் எம். எல். ஏ.-களும், எம். எல். சி.-களும், மாவட்டக் கழகத் தலைவரும் அங்கம் வகித்தால் போக்குவரத்துகள் நல்ல முறையில் நடப்பதற்கும் பஸ் 'ரூட்'களுக்கான 'பெர்மிட்'டுகள் தகுந்த விகிதாச்சாரத்தில் வழங்கப்படுவதற்கும் ஏதுவாக இருக்கும்.

''விழுப்புரம் வட்டத்தில் இப்போது மதுராப்பாக்கத்திலிருந்து மாம்பலப்பட்டி வரையில் பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது; அதை அன்னியூர் வரையிலும் விஸ்தரிக்கவேண்டும். அப்படிச் செய்தால் அங்குள்ள மக்களுக்கு நலமாக இருக்கும். அன்னியூர் கிராமத்தில் ஏராளமான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விழுப்புரத்திற்கும் மற்ற

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாட்டு நெசவாளர் வாழ்வுக்கு இந்தியப் பேரரசு உதவுகிறதா?

‘வாயளவு’ப் பேச்சு வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்த்துவிடுமா?

வளந்தரும் தொழில்களை இழந்துவிட்டு டில்லியிடம் கையேந்தும் நிலை நீடிப்பானேன்?

சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி தெளிவுரை

சென்னை சட்டசபையில் தொழில் இலாகா மானியத்தின் மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“நெய்வேலி திட்டத்திற்கு இதுவரையிலும் ரூ. 1 கோடி செலவிடப்பப்பட்டிருக்கிறது; இத்திட்டத்திற்காக மத்திய சர்க்கார் ரூ. 70 கோடி செலவிடப் போவதாகக் கூறப்படுகிறது. என் இத்திட்டத்தை மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டும்? மாநில சர்க்காரே இதனை ஏற்று நடத்தக்கூடாதா? நிதி வசதி இல்லையென்றால், மத்திய சர்க்காரிடம் கடன் வாங்கி என் நடத்தக்கூடாது?

“நாங்கள் ‘வடக்கு வளருகிறது—தெற்கு தேய்கிறது’ என்று கூறினால் மட்டும் கோபம் வருகிறது; அடுக்கு மொழிக்காகவோ, அலங்கார வார்த்தைகளுக்காகவோ நாங்கள் அதனைக் கூறவில்லை; உண்மை நிலையைப் புரிந்து கொண்டபின்னர்தான் நாங்கள் அவ்வாறு கூறுகிறோம்; அதை எவரும் மறுக்க முடியாது.

“இந்த மாநில சர்க்கார், அந்தத் திட்டத்திற்கு ரூ. 70 கோடியைக் கடனாகப் பெறலாம்; மத்திய சர்க்கார் தராவிட்டாலும் மக்களிடமிருந்தாவது சுலபமாகப் பெற்றிருக்கலாம்.

“நாட்டிற்கு நன்மை தரக்கூடிய திட்டங்களை ஏற்று நடத்த என் இம்மாநில சர்க்கார் முன்வரக்கூடாது? வருமானம் தரக்கூடிய பெரிய திட்டங்களை மத்திய சர்க்காரிடம் விட்டுவிட்டு, சிறிய சிறிய திட்டங்களை நடத்துவதற்கு மத்திய சர்க்காரிடம் என் ‘பிச்சை’ கேட்க வேண்டுமோ தெரியவில்லை? இதைத்தான் நாங்கள் அடிக்கடி சுட்டிக்காட்டுகிறோம்!

“கன்னடம்பிரிந்ததால்பட்டும், கோளம் பிரிந்ததால் பரிமளச் சந்தனமும் நம்மிடமிருந்து பறிபோய்விட்டது; சந்தனச் சோப்பு போன்றவற்றைச் செய்வதற்கான தொழிற்சாலையைத் தமிழ் நாட்டில நிறுவுவதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன; தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் இத்தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வேண்டிய வசதிகளிருக்கின்றன.

“கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினையை நாம் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். கதர் திட்டத்திற்காக அரசாங்கம் அதிக அளவில் செலவிடுகிறது; அந்த அளவில் கைத்தறித் திட்டத்திற்கும் செலவிட்டால் நெசவாளர்கள் எவ்வளவோ முன்னேற்றமடைவர்; அவர்களுடைய பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

“நெசவாளர்களுக்கென்று ரூ. 146 இலட்சம் ஒதுக்கிவிட்டோம்; அவர்களுக்குக் கடன் வசதிகள் செய்து விட்டோம்” என்று சொல்லிவிட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது; உண்மையாகவே அவர்களுக்கு அரசாங்கம் உதவவேண்டுமெனக் கருதினால், இத்துறையில் ஏதேனும் ஒரு திட்டத்தை வகுத்தே தீரவேண்டும்.

“நெசவாளர்கள் சம்பந்தமான ஒரு தீர்மானத்தை இச்சபை, ஆச்சாரியார் அமைச்சரவை காலத்தில் நிறைவேற்றி, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தது; அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டதா என்று கேட்கிறேன். நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவரான ஆச்சாரியாரின் தீர்மானத்தையே இந்தியப் பேரரசு ஒப்புக்கொள்ளவில்லையென்றால், கைத்தறி நெசவாளர் பிரச்சினை எவ்வாறுதான் தீருமென்பதை யோசிக்கவேண்டும்.

“ஆலை முதலாளிகள் அதிகமான அளவில் இன்றையத்தினம் வடநாட்டில்தான் உள்ளனர்; கைத்தறி நெசவாளர்கள் அங்கு அதிக அளவில் இல்லை; அதனால்தான், இம்மாநில சட்டசபை அனுப்பிய தீர்மானத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

“கைத்தறித் தொழில் அதிகமாக வட நாட்டில் இல்லாத காரணத்தினால்தான், அத்தொழில் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது—அதனால்தான் தென்னாட்டுத் தொழிலாளர்கள் அவதியுறுகின்றனர் என்று நாங்கள் கூறுகிறோம்; இந்த உண்மையை மறுக்கமுடியாது; இதை அமைச்சரவர்கள் உணர்ந்து, முன்னர் இச்சபை நிறைவேற்றிய தீர்மானத்தை வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“காஞ்சீபுரம், குறிஞ்சிப்பாடி, குடியாத்தம் ஆகிய இடங்களில் நூல் ஆலைகள் ஏற்படுத்தப்போவதாகவும், அவ்வாறு ஏற்படுத்தினால் நெசவாளர்களுக்கு வேண்டிய நூல் கிடைக்குமென்றும் ஆட்சியிலுள்ளவர்கள் கூறியுள்ளனர்; ஆகவே, இந்த நூல் ஆலைகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமெனக் கோருகிறேன்.

“நெய்வேலியில் கிடைக்கும் துணைப் பொருள்கள் மூலம் சில சாமான்கள் செய்யலாமென்றும், இதற்கானதொழில்களை நடத்தத் தனிப்பட்டவர்களுக்கு அனுமதி தரப்போவதாகவும் நிதி அமைச்சர் கூறியுள்ளார்; என் இவைகளை சர்க்காரே ஏற்று நடத்தக்கூடாது? ஏதோ, செருப்புத் தொழிலையும், தீப்பெட்டித் தொழிலையும் ஆரம்பித்து நடத்தி வருகிறோம் என்று சொல்லிப் பெருமைப்படுவதில் பயனில்லை. வருமானம் வரக்கூடிய பெரிய தொழிற்சாலைகளை ஏற்று நடத்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

“சிறிய தொழில்களை அரசாங்கம் ஏற்று நடத்தக்கூடாது; அதனால் தனியார் பாதிக்கப்படுவர். அப்பளத் தொழில் போன்றவற்றை அரசாங்கம் நடத்தத் தேவையில்லை.

“சிறிய தொழில்களை ஏற்று நடத்துகிறவர்களுக்கு அரசாங்கம் மானியம் வழங்கும்போது, கட்சிப் பாகுபாடு பாராது, எவரெவர் எந்தத் தொழில்களில் உண்மையிலேயே ஈடுபட்டுள்ளனரோ அதைக் கவனித்து, தொழில் முன்னேற்றத்திற்கு வேண்டிய வழிகளைச் செய்யுமாறு கோருகிறேன்.”

காங்கிரஸ் ஆட்சியில்!

சென்னை, ஜூலை 24—

குளக்கரையில் விவசாயம் செய்யும் உழவர்கள் அனுமதி இல்லாமல் சாகுபடி செய்வதாக சென்னை அரசாங்கம் அவர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாம்.

நெல்லை மாவட்டத்தில் 57 பேர்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும், 194 பேர்களை அப்புறப்படுத்துமாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கக்கன் அறிவித்தார்.

இதேபோன்று இராமநாதபுரத்தில் 146 பேர் அப்புறப்படுத்தப்பட்டனராம்; 56 பேர்களை அப்புறப்படுத்துமாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

தோழர் எம். பி. சுப்பிரமணியம் :—“ தவறாக விவசாயம் செய்யும் உழவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அப்புறப்படுத்துவது, உற்பத்தியைப் பாதிக்கும் என்பதால் அவர்களுக்கு சாகுபடி செய்ய உரிமையளிப்பது நல்லதல்லவா?”

அமைச்சர் :—“ அவ்வாறு உரிமை தர இயலாது.”

சென்னை சட்ட மன்றத் தலைவர் நன்றி

சென்னை, ஜூலை 26—

சென்னை அரசாங்கத்தின் 1957—58-ம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தின் மீது கடந்த ஒருமாத காலமாக நடைபெற்ற விவாதம் இன்று முடிவடைந்தது.

விவாதத்தில் கலந்துகொண்டு சிறப்பாக நடந்து கொண்டு ஒத்துழைப்பு தந்த அமைச்சர்களுக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் சட்ட மன்றத் தலைவர் திரு. யு. கிருஷ்ணாராவ் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

புத்தி வந்துவிட்டது!

சென்னை, ஜூலை 24—

தென்னாட்டில் முந்திரித் தொழில் சிதைந்து வருகிறது என்று நாம் பலமுறை எடுத்துரைத்ததின் காரணமாக சென்னை அரசாங்கம் இதைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் 42,000 ஏக்கர் நிலத்தில் முந்திரித் தோட்டங்கள் பயிரிடத் திட்டமிட்டிருப்பதாக சட்டசபையில் தொழில் அமைச்சர் தெரிவித்தார்.

சாதித்தது இதுதான்?

சென்னை, ஜூலை 26—

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் அருகில் மகா நதி குறுக்கே ஒரு அணை கட்டுவதற்காக ரூ. 75 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதாம்; இதனால் 500 ஏகர் நிலம் சாகுபடிக்கு வரும் என்றும் கருதப்பட்டது; ஆனால் அந்தத் திட்டம், மத்திய அரசாங்க உதவி கிடைக்காத காரணத்தால் கைவிடப்பட்டது என்று அமைச்சர் கக்கன் சட்டசபையில் தெரிவித்தார்.

தாழ்த்தப்பட்டோருக்குத் தங்கும் விடுதிகள்

அமைச்சர்தரும் தகவல்

சென்னை, ஜூலை 24—

சென்னை மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோர் தங்குவதற்கான 25 வீடுகளை அரசாங்கம் நடத்தி வருவதாகவும், 242 விடுதிகளைத் தனியார் நடத்திவருவதாகவும் இவைகளில் தங்குவதற்கு 10 பெண்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது என்றும், மொத்தம் 43 பெண்கள் விடுதிகளில் இருப்பதாகவும் அமைச்சர் கக்கன் தெரிவித்தார்.

‘நயே பைசே’-மக்களைப் பாதிக்கிறது

‘விலை உயர்வுக்குக் காரணமாகிறது’

‘சிக்கலை வளர்க்கிறது; தொல்லை தருகிறது’

சட்டசபையில் அன்பழகன், எம். பி. சுப்பிரமணியம் ஆகியோர் எதிர்ப்பு

சென்னை, ஜூலை 24—

சென்னை விற்பனைவரிச் சட்டத் திருத்த மசோதா இன்று சட்டசபையில் கொண்டுவரப்பட்டது; வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை சரிக்கட்டிக்கொள்ள விற்பனை வரி விகிதத்தை1-9/16சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக அதிகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் மசோதாவை பிரேபித்துப் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, அனுமதி கோரினார்.

க. அன்பழகன்

இந்தத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து தோழர் க. அன்பழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவதின் மூலம் அரசாங்கத்திற்கு அதிக வருமானம் கிடைக்கிறது என்று அமைச்சர் கூறினார். தக்க முறையில் அரசாங்கம் அதிக வருமானம் தேட முயல்வதை நாங்கள் தடுப்பவர்கள் அல்ல; வருமானம் அதிகரிக்கக் கூடாது என்று எதிர்ப்பவர்களும் அல்ல! அதே நேரத்தில், அரசாங்கம் மேற்கொள்ளும் முறை பொதுமக்களைப் பாதிப்பதாகவும், வெறுப்பு உணர்ச்சியை தேடிக்கொள்வதாகவும் இருக்கக்கூடாது என்றுதான் இந்தத் திருத்த மசோதா எதிர்க்கிறோம்.

“‘நயே பைசே’ முறை பொதுமக்களுக்குப் பல புதிய சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது; தொல்லைகள் பெருகியுள்ளன. 1-9/16-க்குப் பதிலாக 2 சதவிகிதம் வசூலிக்கத் திட்டமிடுவது எந்த அளவுக்கு நியாயமானது—மக்களுக்கு நன்மை பயக்குவது என்று எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். 1-9/16-க்குப் பதிலாக 16/16 என்று முழுதாக்கலாம். அரை ‘நயே பைசே’ தற்போது இல்லை. ½ நயா பைசா அச்சடிக்குமாறு இந்த மாநில அரசாங்கம் மத்திய சர்க்காரை வற்புறுத்தலாம்.

“உயர்வுக்கு ஏற்றவாறு இப்போது பொதுமக்களிடம் வரி வசூலிக்க வழியில்லை; நேரடியாக எந்த அளவு உயர்த்தப்பட்டுள்ளதோ, அந்த அளவைவிட அதிகம் வசூலிக்கப்படுகிறது; இது, விலை ஏற்றத்திற்கு வழிகாட்டுகிறது; நேரடியாக நியாயமான முறையில் வசூலிக்க வழியில்லை. சிறு தொகைகளை செலவிட்டு அன்றாடம் ஏழை மக்கள் வாங்கும் பொருள்களுக்கு அதிகம் செலவிடவேண்டிய நிலை உள்ளது, மேலும், நடுக் கொள்ளைக்கும், இரகசிய இலாபத்திற்கும் இப்போது இடமிருக்கிறது. பொதுமக்கள் வியாபாரிகளிடம் ஏமாறுகிறார்கள். அது மட்டுமல்ல; போதிய ‘நயே பைசே’ நாணயங்கள் பொதுமக்களிடம் புழக்கத்தில் இல்லை. ஏராளமான கிராம மக்கள் இன்னும் ‘நயே பைசே’வைக் காணாமல் இருக்கின்றனர்.

“அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதோ இல்லையோ பொதுமக்களின் குறைகளைஎடுத்துச்சொல்ல வேண்டியது எங்கள் கடமை என்றே கருதுகிறேன். அதனால்தான், மக்களின் வெறுப்பைப் பெற்று, அதிக சிக்கலை வளர்த்துத் தொல்லை தரும் நிலைக்கு வழிகாட்டும் இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். ‘பழைய குருடி கதவைத் திறடி’ என்ற பழங்காலப் மொழிக்கேற்ப, ஏற்கனவே ஏமாற்றப்பட்டு வரும் பொதுமக்கள், இதனால் மேலும் ஏமாற்றப்படும் நிலையை இந்தத் திருத்தம் உருவாக்கும்.”

எம். பி. சுப்பிரமணியம்

அடுத்து, திருத்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசுகையில் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதாவது :—

“இந்தத் திருத்த மசோதாவின்மூலம் 1-9/16-க்குப் பதிலாக 2 நயேபைசே வசூலிப்பது பார்ப்பதற்குச் சாதாரணமாகவும் சிறு தொகையாகவும் தோன்றலாம்; ஆனால் இதுவரையில் இந்த விகிதத்தில் ரூ. 3000 விற்பனை வரியாகக் கட்டிக் கொண்டுவந்த சிறு வியாபாரிகள் இனிமேல் இந்த உயர்வின் காரணமாக ரூ. 4000-மாகக் கட்ட வேண்டி இருக்கும். ஏற்கனவே விலைவாசிகள் உயர்ந்துள்ளன; வாழ்க்கைத் தரமும் அதிகரித்துள்ளது.இதன் மூலம் மேலும் பொருள்களின் விலைகள் நிச்சயம் அதிகரிக்கும்.

“அதுமட்டுமல்ல; இப்போது இந்தத் திருத்தம் அவசியம் இல்லை என்றே கருதுகிறேன். விற்பனை வரி பற்றி ஆலோசனை கூற டாக்டர் லோகநாதன் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை. இதற்குள் இந்தத் திருத்தம் அவசியம் இல்லை என்பதே என் கருத்தாகும்; அதனால்தான் இந்தத் திருத்தத்தை அடியோடு மறுக்கிறேன்.”

அமைச்சர் பதிலளிக்கையில், குழந்தைகளுக்கு அவசியமான பாலுக்குக்கூட விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க யோசனையில்லை யென்றும், இப்போது பாலுக்கு விதிக்கப்படும் வரி ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்படுமென்றும், இந்த மாறுதல் ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து அமுலாகும் என்று கூறினார். மசோதா நிறைவேறியது.

‘மாட்டு வாரம்’

பி. எஸ். சந்தானம் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, ஜூலை 24—

“நிலச் சொந்தக்காரர்களுக்கும், விவசாயம் செய்யும் உழவர்களுக்கும் ரூ. 1,000 வரை ‘மாட்டு வார’மாக சென்னை அரசாங்கம் கடன் தருகிறது” என்று கழக உறுப்பினர் பி. எஸ். சந்தானம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் குறிப்பிட்டார்.

கன்னியாகுமரி மாவட்ட அரசாங்க ஊழியர்கள்

பஞ்சப்படி பெறும் நிலைபற்றி அமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 26—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு, புதிய மாநில அமைப்புக்குப் பிறகு அதிகப்படியான பஞ்சப்படி தரவில்லை என்றும், 1—11—56-க்குப் பிறகு பதவி உயர்வு பெற்றவர்களுக்கு மட்டுமே சென்னையில் தரப்படும் அளவுக்குப் பஞ்சப்படி தரப்படுகிறது என்றும் நிதியமைச்சர் சட்டசபையில் தெரிவித்தார்.

திருத்தம்

‘ரூ. 15,000 வருமானம் உள்ளவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்’ என்று கழக உறுப்பினர் தோழர் எம். செல்வராஜ் அவர்கள் சட்டமன்றத்தில் விற்பனை வரிமீது நடைபெற்ற விவாதத்தில் பேசியுள்ளதை, ‘ரூ. 15,000 ஆண்டு நிகர விற்பனை (டர்ன் ஓவர்) வரியிலிருந்து...’ என்று திருத்திக் கொள்ளக் கோருகிறோம்.

—ஆசிரியர்

க. அன்பழகன் யோசனையை ஏற்க மறுப்பு!

சென்னை, ஜுலை 27—

இன்று சென்னை சட்ட சபையில் கேள்வி நேரத்திற்குப் பிறகு தோழர் க. அன்பழகன் அவர்கள் சென்னை உயர்தர போலீஸ் அதிகாரியை பற்றி விசாரணை நடத்துவது பற்றி அரிய யோசனை ஒன்று கூறினர்.

போலீஸ் துறை மானியத்தின் மீது தான் தெரிவித்த கருத்துக்களை மதித்து அரசாங்கம் விசாரணைக்கு ஏற்பாடு செய்ய முன் வந்ததை வரவேற்றும், தானாகவே விசாரணைக்கு உட்பட்ட போலீஸ் அதிகாரியின் பெருந்தன்மையையும் அவர் பாராட்டினர்.

அதே நேரத்தில் பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடைபெற வேண்டுமானால், விசாரணை காலத்தின்போது அந்த போலீஸ் அதிகாரி பதவியில் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும், அதற்காக அரசாங்கம் உத்திரவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் பதிலளிக்கையில், விசாரணை அடிப்படைகளில் பல மாறுதல்கள் உண்டு என்றும், இந்த விசாரணையின்போது போலீஸ் அதிகாரியை பதவியிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு விலக்கிவைப்பது அவசியம் இல்லை என்றும் குறிப்பிட்டுவிட்டு தோழர் க. அன்பழகன் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்.

இராசிபுரம் பகுதியில் தண்ணீர் பஞ்சம்

முதல் சலுகை தருமாறு சட்டசபையில் எம். பி. சுப்பிரமணியம் கோரிக்கை

சென்னை, ஜுலை 26—

சேலம் மாவட்டத்தில் இராசிபுரம் பகுதியில் நிலவும் தண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்கான திட்டம் ஆராயப்பட்டு வருவதில் தாமதம் ஏற்படுவது பற்றி இன்று சட்டசபையில் தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேள்வி ஒன்று எழுப்பினர்.

கே:—"கிணறுகளில் 70, 80 அடி ஆழத்தில் தண்ணீர் இருப்பதாலும், குடம் 2 அணு வீதம் குக்கூட விற்கப்படும் நிலைமை இருப்பதாலும், இந்தத் திட்டத்திற்கு முதல் சலுகை தரப்படுமா?"

அமைச்சர்:—"மத்திய அரசாங்கத்திடம் உதவியாகக் கேட்கப்பட்டுள்ள ரூ. 265 இலட்சம் கிடைத்தவுடன் உடனடியாக வேலை துவக்கப்படும்."

காங்கிரஸ் போலி வேடம் கலைகிறது!

சென்னை, ஜுலை 27—

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக இனி மேலும் பள்ளிகளைத் திறப்பதற்கு சென்னை அரசாங்கத்திற்கு எண்ணமில்லையாம்!

மற்றவர்களுடன் சேர்ந்து வேறு எந்தப் பள்ளியில் படித்தாலும் அவர்களுக்குப் பகல் உணவுக்காகப் பணம் தரும் நோக்கமும் இல்லையாம்!

சட்டசபை கேள்வி நேரத்தில், அமைச்சர் கக்கன் இவ்வாறு தெரிவித்தார்.

'ஜமாபந்தி'க்கு வராததின் விளைவு!

தென்னார்க்காடு மாவட்டத்தில் பண்ருட்டி தாலுகாவில் 42 கிராம அதிகாரிகளுக்குப் பிரயாணப் படி தரப்படவில்லை என்றும், 'ஜமாபந்தி'க்கு அவர்கள் வாராததே இதற்குக் காரணம் என்றும் அமைச்சர் மாணிக்க வேலர் சட்டசபையில் தெரிவித்தார்.

சாத்தனூர் திட்டம்

ப. உ. சண்முகம் கேள்வி

சென்னை, ஜுலை 27—

'சாத்தனூர் திட்டம்' முடியும் தருவாயில் உள்ளது என்று அமைச்சர் சட்டசபையில் அறிவித்துள்ளார்.

"இத்திட்டத்தினுல், காலனிகளில் உள்ள பலர் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது; அவர்களுக்கு ஒரு தீப்பெட்டி தொழிற்சாலை ஏற்படுத்தி உதவியளிக்கும் திட்டம் உண்டா?"

என்று கழக உறுப்பினர் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் கேட்டபோது, அமைச்சர், தனிக் கேள்வி போடுமாறு கூறிவிட்டார்.

சாத்தனூர் அணைத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 40 இலட்சம் செலவிடப்படுமாம்.

திருவண்ணாமலைப் பகுதிக்கும் இங்கிருந்து தண்ணீர் பாய்ச்சப்படும் என்று அமைச்சர் கூறினர்.

6,500 கோவில்கள் இருக்கிறதாம்!

பணியாற்றும் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை பற்றி தகவல்

சென்னை, ஜுலை 27—

சென்னை மாநிலத்தில் மொத்தம் 6,500 கோவில்கள் அறநிலையப் பாதுகாப்பு நிறுவனத்தின் கீழ் உள்ளது என்றும், 7,209 சிறு கோவில்கள் அந்நிறுவனத்தின் மேற்பார்வையில் உள்ளது என்றும் அமைச்சர் கக்கன் சட்டசபையில் தெரிவித்தார்.

899 கோவில்களில் பொறுப்பாளர் நிர்வாகம் நடைபெறுகிறது என்றும், மொத்தம் 167 தாழ்த்தப்பட்டவர்கள் கோவில்களுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சிறைக் கைதிகள் பற்றி கழக உறுப்பினர்கள் கேள்விகள்

சென்னை, ஜுலை 27—

சிறைச்சாலைகள் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகளை சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும், அச்சிபாரிசுகளை அமுல் நடத்த சர்க்கார் முடிவு செய்துள்ளது என்றும் போலீஸ் அமைச்சர் எம். பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்தார்.

ஏ.வி. வி. ஆசைத்தம்பி:—"கைதிகளுக்கு மொட்டை அடிக்கும் பழக்கம் சிறையில் இன்னும் நீடிக்கிறதா?"

அமைச்சர்:—'இல்லை.'

க. அன்பழகன்:—"கைதிகளின் ஒழுக்கத்தை உயர்த்த சிறையில் 'திருக்குறள்' கற்றுத்தரப் படுமா?"

அமைச்சர்:—"விடுமுறை நாட்களில் இப்போது கற்றுத்தரப்படுகிறது."

எம். பி. சுப்பிரமணியம்:—"கைதிகளுக்குத் தரப்படும் உணவு, மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடுவதை மாற்றி ஒரே மாதிரியான உணவு எல்லா சிறைகளிலும் தரப்படுமா!"

அமைச்சர்:—"கைதிகளுக்கு நல்ல உணவு தரப்படுகிறது."

மு. கருணாநிதி:—"சிறைச்சாலைப் பள்ளிகளின் ஆசிரியர்கள் தூங்குவதால் பள்ளியின் தரம் குறைந்திருப்பதை அரசாங்கம் அறியுமா? அவ்வாறு இல்லாத வாறு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா?"

அமைச்சர்:—"வெளியிலுள்ள பள்ளிகளிலும்கூட ஆசிரியர்கள் தூங்குகிறார்கள்; எனவே, அங்கும் தூங்குவது ஆச்சரியமல்ல" என்று வேடிக்கையாகப் பதிலளித்தார்.

சென்னையின் கோரிக்கை கவனிக்கப்படுமா?

சென்னை, ஜுலை 27—

'நெல்லையிலிருந்து குமரிமுனை வரையில் நாகர்கோவில் வழியாக இரயில்பாதை அமைப்புத் திட்டத்திற்குத் தனிச் சலுகை காட்டி, திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது' என்று சட்டசபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூ. 10,15,500 நடுக்கொள்ளையா?

சென்னை, ஜுலை 27—

சேலம் மாவட்டத்தில் ஓமலூர் தாலுகாவில், கோதகவுண்டன் பட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்பு திட்டம் ரூ. 10,15,500 செலவில் நிறைவேற்றப்பட்டது என்றும், இந்தத் தொகை சரிவர செலவிடப்படவில்லை என்றும், வீடுகள் கட்டுவதற்கான பொருள்கள் சரிவர வழங்கப்படவில்லை என்றும் 2—5—57-ல் புகார் கிடைத்துள்ளது என்றும், அதைப்பற்றி மேற்கொள்ளப்பட்ட விசாரணை முடிந்துவிட்டது என்றும் அமைச்சர் கக்கன் சட்டசபையில் தெரிவித்தார்.

வெட்கக்கேடு!

சென்னை, ஜுலை 27—

இனம் கிராமங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை ஆமை வேகத்தில் நடைபெறுகிறது என்பதற்குச் சான்று கிடைத்துள்ளது.

'இன்னும் 1,580 இனம் கிராமங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவில்லை' என்று சட்ட சபையில் கேள்வி நேரத்தின் போது அமைச்சர் மாணிக்க வேலர் தெரிவித்தார்.

இந்த இனம்கள் ஒழிப்புக்கு எதையோ ஆராய்ந்து வருகிறதாம், அரசாங்கம்!

அதிகாரிகளுக்கு வேறு வேலை தரப்பட்டுள்ளதாம்!

"சென்னை மாநிலத்தில் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்திற்கும், சமுதாய நலத் திட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்ட அதிகாரிகள், அதற்கென ஒதுக்கப்பட்ட முழுத் தொகையை செலவழித்துவிட்ட பின்னரும் அவர்கள் என்ன செய்கிறார்கள்?"

என்று தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள், சட்டசபையில் கேள்வி ஒன்று எழுப்பினர்.

"அந்த அதிகாரிகளுக்கு தீவிர திட்டத்தின் கீழ் வேலை தரப்பட்டுள்ளது" என்று நிதி அமைச்சர் பதிலளித்தார்.

சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை மக்கள் மன்றம் 2-வது ஆண்டு விழாவில்

அண்ணா கலந்துகொள்வார்.

மேற்படி மன்றத்தின் இரண்டாம் ஆண்டுவிழா 2—9—57 திங்கள் மாலை நடைபெறும்; அண்ணா அவர்கள் கலந்து கொள்வார்.

கண்டனக் கூட்டம்

31—7—57 மாலை 6-மணிக்கு, சென்னை 1-வது வட்டம் தி. மு. க. அனுதாபிகள் சார்பில், இராயபுரம்—புதுமனைக்குப்பம் நிறுவர் பள்ளி அருகில், தோழர் என். சீவரத்தினம் தலைமையில் புதுவரி கண்டனக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் சி.பி. சிற்றரசு, காஞ்சி-கல்யாணசுந்தரம், வே. கபிலன் ஆகியோர் பேசுவர். தோழர் டேப்-இராதாமாணிக்கம் இன்னிசை வழங்குவார்.

காந்தியார் காட்டிய வழியை காங்கிரஸ் அமைச்சர் பழிக்கிறார்!

நியாயம் இல்லாதவர்கள்தான் உண்ணாவிரதம் இருப்பார்களாம்!

எம். பி. சுப்பிரமணியத்திற்கு அமைச்சர் பதில்

சென்னை, ஜுலை 27—

பொதுமக்கள், ஆட்சியாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்குடன், ஜனநாயக முறையில் எல்லா முயற்சிகளும் பயனற்றுப்போன பின்னர், உண்ணாநோன்பு இருப்பதை சென்னை சட்டசபையில் கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கண்டித்துப் பேசினர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள், நியாயம் பெற வேண்டும் என்ற தூயநோக்கத்துடன் பட்டினி கிடப்பதைப் பற்றி, சட்டசபையில் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் இன்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்; அவர் குறிப்பிட்டதாவது:—

"அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதியிலிருந்து 9 மாணவர்கள் காரணமின்றி திடீரென்று வெளியேற்றப்பட்டுள்ளனர். அந்த மாணவர்கள் மீது ஏன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அதிகாரிகளைக் கேட்டும், இதுவரை அவர்கள் எதும் கூறவில்லை. அந்த மாணவர்களில் 7 பேர் அரசாங்கத்தின் உதவி பெற்று கல்வி கற்றுவருபவர்கள். அவர்களிடம் விடுதியில் தங்குவதற்கான முன் பணம் பெற்றுக்கொண்டு, இவ்வாறு நடவடிக்கை எடுத்திருப்பது அவர்களைப் பாதிக்கிறது; கடந்த 24—7—57 முதல் 4 மாணவர்கள் விடுதி வாயிலில் உண்ணா நோன்பு மேற்கொண்டுள்ளனர். அவர்களில் சிவப்பிரகாசம் என்ற மாணவரின் உடல்நிலை மோசமாகி, வைத்திய விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

"இதுவரை அவர்களின் குறைகளைப் போக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை; இந்தச் சம்பவம் அங்குள்ள பொது மக்களிடை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

"அரசாங்கம் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு மானியம் தருவதால் இதை உடனடியாகக் கவனிக்க வேண்டிய அவசியம் உள்ளது; எனவே, இதைப் பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

நிதி அமைச்சர் பதில்

"அங்கத்தினர் கூறும் விஷயத்தைப் பற்றி தகவல் வரவில்லை; தகவல்களைச் சேகரிக்கும்படி சம்பந்தப்பட்ட இலாகாவைக் கேட்டிருக்கிறேன். பல்கலைக்கழகம் நடத்தும் உணவு விடுதியில் அரசாங்கம் தலையிடுவதற்கில்லை.

"அதுமட்டுமல்ல; நியாயம் தங்கள் பக்கம் இல்லாதவர்கள்தான் பட்டினி கிடப்பார்கள் என்பது என் கருத்தாகும்; ஆகவே, பட்டினி கிடப்பதைக் கைவிட்டு சாதாரண முறையில் குறைகளைத் தெரிவித்தால் அரசாங்கம் கவனிக்கும். மாணவர்கள் பட்டினி கிடப்பதை நிறுத்துவதற்கு அங்கத்தினர் முதலில் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

தோழர் எம். பி. சுப்பிரமணியம் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை சட்டமன்றத் தலைவர் நிராகரித்தார்.

கழகக் கூட்டங்கள்

★

தேனி:
கிழக்குச் சந்தையில்
31—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்:
எம். எஸ். வி. செந்தியப்பன்
பேசுவோர்:
மு. கருணாநிதி
வி. வி. குருசாமி
மு. தங்கராசன்
குறிப்பு:—அன்று மாலை ஓர் மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

★

சென்னை 17-வதுவட்டம்:
சூளை அஷ்டபுஜம் தெருவில்
30—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சத்தியவாணிமுத்து
பேசுவோர்:
நாஞ்சில் கி. மனோகரன்
ஆர். ஜார்ஜ்
வி. எஸ். கோவிந்தராசன்

செல்வராஜ் விளக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இடங்களுக்கும் வருவதில் தாமதம் ஏற்படுகிறது. இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்காகவும் புதிய பஸ் 'ரூட்'களுக்கு அனுமதி அளிக்க கோருகிறேன்.

"சென்னை நகரில் ஓடும் பல 'ஆட்டோ ரிக்ஷா'க்கள் 'மீட்டர்'கள் இல்லாமல் ஓடுகின்றன. 'டிரைவர்'கள் சொல்லும் 'மைலேஜ்'க் கேட்டு அதன்படிதான் பிரயாணம் செய்பவர்கள் கட்டணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதன் காரணமாக சில சமயங்களில் டிரைவர்களுக்கும் பிரயாணம் செய்பவர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு அவர்கள் போலீஸ் நிலையத்திற்கும் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. 'டாக்சி'களில் உள்ளதைப் போன்று அவைகளிலும் 'மீட்டர்'கள் பொருத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்; மேலும், இவைகளுக்கு வசூலிக்கப்படும் வரியையும் குறைக்கவேண்டும்.

"லாரிகளுக்கு வசூலிக்கப்படும் வரி விகித முறையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. பொதுவாக, 15,900-லிருந்து 16,800 பவுண்டுகள்வரை சுமக்கக்கூடிய லாரிகளுக்கு ரூ. 360-ம்; 16,800-லிருந்து 20,160 பவுண்டுகள் வரை சுமக்கக்கூடிய லாரிகளுக்கு ரூ. 427-ம்; 20,160 பவுண்டுக்கு மேல் சுமக்கக்கூடிய லாரிகளுக்கு ரூ. 467-ம் வரியாக விதிக்கப்பட்டிருக்கிறது. சில லாரிகள் உண்மையிலேயே இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ள அளவைவிட அதிகம் சுமக்கக்கூடியவையாக இருக்கின்றன; ஆனால், குறைவான சுமையையே அனுமதிக்கப்பட்டுள்ளது. அவைகளுக்கு உள்ள சரியான உயர்ந்தபட்ச சுமையை அனுமதித்து அதிக வரி விதித்தையும் அனுமதித்தால் அதிக வரியைக் கொடுப்பதற்கு லாரி சொந்தக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள். இதனால் சர்க்காருக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் வருவாயாகக் கிடைக்கும்.

"விபத்துக்களைத் தடுப்பதைப் பொறுத்தவரையில், வண்டிகளை ஓட்டுவதற்கு 'லைசென்ஸ்' வழங்குவதிலுள்ள இப்போதைய முறையை மாற்ற வேண்டும். நல்ல 'டிரைவிங் டெஸ்ட்' வைக்க வேண்டும். குறைந்தது மூன்று அல்லது ஆறுமாத காலம் அரசாங்கத்தின் மூலம் பயிற்சி பெற்ற பிறகுதான் வண்டி ஓட்ட வேண்டும் என்று நிர்ணயித்தால், விபத்துக்களைக் குறைக்கலாம்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.